<u>வாக்குமூலம்</u>
<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>
<u>வழக்கு எண் : SC.No. 344/2021</u>
<u>வழக்கு சாட்சி PW-8</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுந்தர்ராஜா | தாலுகா | : | தென்காசி |
| தந்தை பெயர் | : | மாரியப்பன் | தொழில் | : | மேளம் |
| கிராமம் | : | பாவூர்சத்திரம் | வயது | : | 24 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of August 25th, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் பாவூர்சத்திரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் மேளம் அடிக்கும் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்துக்கள் என்னுடையது தான். அந்த கையெழுத்துக்களை காவல்நிலையத்தில் வைத்து போட்டு கொடுத்தேன். ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது கையெழுத்து அ.சா.ஆ.5 ஆகும். அத்தாட்சியிலுள்ள இரண்டாவது கையெழுத்து அ.சா.ஆ.6 ஆகும். இந்த வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 30.09.2019 ம் தேதி மதியம் 02.00 மணியளவில் நானும், ராஜா என்பவரும் பாவூர்சத்திரம் காவல்நிலையத்திற்கு சென்றபோது, அங்கு காவல்நிலைய குற்ற எண்.436/2019 வழக்கின் எதிரிகள் அருணாச்சலம் என்ற வினோத், தங்கபாண்டியன் ஆகியோர்களை கைது செய்து நிலையத்தில் வைத்திருந்தபோது, என் முன்பாகவும், சாட்சி ராஜா முன்பும் விசாரித்தார்கள் என்றும், அப்போது எதிரி அருணாச்சலம் என்ற வினோத் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்பு பதிவு செய்தார்கள் என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கு சம்பவத்தில் எதிரிகள் எடுத்து ஆஜர் செய்த இரும்பு கம்பிகள் 2 ஐ அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார்கள் என்றும், ஒப்புதல் வாக்குமூலத்திலும், அத்தாட்சியிலும் சாட்சிகளாக நாங்கள் கையெழுத்து போட்டோம் என்று கூறிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து அவர்களுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.08.26 12:02:50 +0530